பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

26 09 2025 FRIDAY 6.30 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆரோக்கியமான பெண்-வலிமையான குடும்பம் இயக்கத்தின் கீழ் இதுவரை ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. கடல்சார் துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு 70 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி தொடர்ந்து வலுவடைந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

**>>>>>><<<<<<**

ஆரோக்கியமான பெண் - வலிமையான குடும்பம் இயக்கத்தின் கீழ் இதுவரை ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பீகார் அரசின் மகளிர் நலனுக்கான திட்டத்தை காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்த இயக்கத்தின் கீழ் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம்கள் மூலம், ரத்தசோகை, புற்றுநோய், நீரிழிவு நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த இயக்கத்தை மகளிர் அனைவரும் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

மகளிர் முன்னேற்றமே சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்ற அடிப்படையில் இந்த இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

உணவு பதப்படுத்துதல் துறையில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. சிராக் பஸ்வான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் உலக உணவு மாநாட்டில் ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக மதிப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், 9 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகக்கூடும் என்றும் அமைச்சர் கூறினார்.

உணவு பதப்படுத்துதல் துறையில் இந்தியாவின் திறன் இந்த மாநாட்டின் மூலம் உலகிற்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளதாகவும் திரு. சிராக் பஸ்வான் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

கடல்சார் துறையில் இதுவரை இல்லாத அளவிற்கு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

சென்னையை அடுத்த உத்தண்டியில் உள்ள கடல்சார் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

அடுத்த 22 ஆண்டுகளுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கடல்சார் துறையின் வளர்ச்சிக்காக இதுவரை இல்லாத அளவிற்கு 70 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கும் என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி குழுமத்தின் நிறுவன தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

நவீன தகவல் தொடர்பு சாதனங்களை விஞ்ஞானிகள் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அறிவியில் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் குழுமத்தின் விஞ்ஞானிகள், உள்நாட்டு தொழில்நுட்பத்தின் மூலம், நாட்டின் முதலாவது நோய் எதிர்ப்பு மருந்தான Nafithromycin-ஐ கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தியதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<

விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு தமிழக அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு இன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கி அவர் பேசினார்.

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு 150 கோடி ரூபாய் அளவிற்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருப்பதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பள்ளி கல்வித்துறையில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்று கூறினார்.

கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற நிகழ்ச்சியில் நடிகர்கள் மற்றும் இயக்குநர்களை கலந்து கொள்ள வைத்து, திமுக அரசு அதன் மூலம் விளம்பரத்தை தேடுவதாகவும் அவர் குறை கூறினார்.

வெள்ளை அறிக்கை கேட்டால், வெற்றுப் பேப்பரை மாநில அமைச்சர் திரு. ராஜா காட்டுவதை சுட்டிக்காட்டிய அவர், திமுக அரசாங்கமே வெற்றுக்காகிதம் தான் என்றார்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை மக்கள் விரும்புவதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை விரும்பும் கட்சிகள், தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையலாம் என்று த.மா.கா தலைவர் திரு. ஜி.கே. வாசன் கூறியுள்ளார்.

திருநெல்வேலி அருகே தேவர்குளத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு கவலைக்கிடமாக உள்ளது என்றும் திரு. ஜி.கே. வாசன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்து நாளை காலை ஆந்திரா - ஒடிசா இடையே கரையைக் கடக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

நீலகிரி, கோவை உட்பட 6 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

நாகை மாவட்டத்தில் கோ-ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு விற்பனையை ஆட்சியர் திரு. ஆகாஷ் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக, காளிகேசம் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் ரேபிஸ் நோய் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. சரவணன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் சைகை மொழி குறித்த விழப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் பிரிவில் Jonathan Gavan Antony தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 10 மீட்டர் பிரிவில் Rashmika Sehgal வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 2 தங்கம், 3 வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

>>>>>><<<<<<

உலக பாரா வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Shetel Devi - Sarita இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

தென்கொரியாவின் Gwangju-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்த இணை 152-150 என்ற புள்ளிக்கணக்கில் இங்கிலாந்தின் Paterson Pine Phoebe – Stretton Jessica இணையை வென்றது.

>>>>>><<<<<<

மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசிய பசிபிக் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், Chanvi Sharma தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் Chanvi Sharma – Sujita Sukumaran இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் Ankit Dalal-ம், இரட்டையர் பிரிவில் Ankit Dalal - Amal Biju இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

ஜப்பான் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஜப்பானின் Takeru Yuzuki இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 7-6 என்ற செட்கணக்கில் அர்ஜென்டினாவின் Maximo Gonzalez - Andres Molteni இணையை வென்றது.

>>>>>><<<<<<

அமெரிக்காவின் Fremont-ல் நடைபெற்று வரும் சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Aditya Das வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

ஈட்டி எறிதல் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் சச்சின் யாதவ் 7வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். நீரஜ் சோப்ரா 3வது இடத்தில் நீடிக்கிறார்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 167 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பிரிஸ்பனில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 280 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Vedant Trivedi 86 ரன் எடுத்தார்.

281 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த ஆஸ்திரேலியா 28 புள்ளி 3 ஓவரில் 113 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

Khilan Patel அபாரமாக பந்துவீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

**>>>>>><<<<<<**

லக்னோவில் நடைபெற்ற ஆஸ்திரேலியா-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்தியா-ஏ அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

>>>>>>END<<<<<<